# ஒரு துறை சார்ந்த கல்வியைத் தேர்ந்தெடுத்தல்

## பெற்றோர்/பாதுகாவலர்களுக்கான பரிந்துரைகள்



பள்ளியிலிருந்து தொழில்முறை உலகிற்கு மாறுவது இளம் பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும். அவர்கள் தங்களுக்கு மகிழ்ச்சியை தரும் மேலும் புதிய புதிய உந்துதலைப் பெறக்கூடிய ஒரு கல்வியைத் தேர்ந்தெடுக்கலாம். அதாவது தங்களுக்கு ஏற்ற தொழில்முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு தொழில்முறையைத் தேர்ந்தெடுக்கும்போது சில சிரமங்கள் ஏற்படுவது இயல்பான விஷயம்தான். இளைஞர்கள் VET தேர்வுகளைப் பற்றி ஆரம்ப கட்டத்தில் அறிந்து கொள்ள வேண்டும், இதனால் அவர்கள் VET க்கு வெற்றிகரமாக மாற முடியும். இந்தச் செயல்பாட்டில் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் இளம் பிள்ளைகளுக்கு குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்க முடியும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது. இவைதான் பரிந்துரைகள்.

**ஒரு பெற்றோராக நீங்கள் என்ன செய்யலாம்?**

- வேலை சந்தை பற்றி **தெரிந்து கொள்ளுங்கள்.** இதைப் பற்றி நீங்களே அறிந்திருந்தால், உங்கள் மகன்/மகளை சிறப்பாக ஆதரிக்கலாம்.
- உங்கள் மகன்/மகளுக்கு இடைக்கால பயிற்சிகள் (இண்டர்ஷிப்கள்) மற்றும் சோதனை தொழிற்பயிற்சிகள் (ட்ரையல் அப்ரெண்டிஸ்ஷிப்கள்) ஆகியவற்றை கண்டறிய உதவ, பணியில் உள்ள உங்கள் **தொடர்புகள்** மற்றும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களைப் பயன்படுத்தவும்.
- ஒரு **முன்மாதிரியாக இருங்கள்.** உங்கள் சொந்த தொழில்முறை அனுபவங்களைப் பற்றி உங்கள் மகன்/மகளுக்குச் சொல்லுங்கள் மற்றும் தொழில்முறை உலகில் ஏற்பட்ட நேர்மறையான அனுபவங்களைப் பற்றி தெரிவிக்கவும்.
- உங்கள் மகன்/மகள் (பள்ளியின் 7வது ஆண்டில் இருக்கும் போது) அவரது துறை சார்ந்த கல்வித் தேர்வு பற்றி **ஆரம்ப நிலையிலேயே** சிந்திக்கத் தொடங்க ஊக்குவிக்கவும்.

- உங்கள் மகன்/மகளை **இடைக்கால பயிற்சிகள் (இண்டர்ஷிப்கள்)** மற்றும் **சோதனை தொழிற்பயிற்சிகள் (ட்ரையல் அப்ரெண்டிஸ்ஷிப்கள்)** ஆகியவற்றை செய்ய ஊக்குவிக்கவும்.
- இளைஞர்கள் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான ஒத்துழைப்பு முக்கியமானது. **அவர்களின் ஆசிரியர்களுடன் தொடர்பில் இருங்கள்.**
- உங்கள் மகன்/மகள் மீது அதிக **எதிர்பார்ப்புகளை** வையுங்கள், ஆனால் மிக அதிகமாக இல்லை. அவரது சாதனைகளுக்காக அவரை பாராட்ட பயப்பட வேண்டாம்.
- இளம் பிள்ளைகள் சுதந்திரமானவர்கள், ஆனால் அவர்கள் **தங்கள் பொறுப்புகளை மதிக்க வேண்டும்.** உங்கள் மகன்/மகள் நம்பகமானவராக இருக்க கற்றுக்கொடுங்கள்.
- **உணர்ச்சிபூர்வமான ஆதரவை** வழங்குங்கள். ஒரு துறை சார்ந்த கல்வியைத் தேர்ந்தெடுப்பது பற்றி அடிக்கடி பேசுங்கள். உங்கள் மகன்/மகள் எதிர்மறையான முடிவுகளை எதிர்கொள்ளும் போது உண்மையான ஆர்வத்தைக் காட்டுங்கள் மற்றும் ஆறுதல்படுத்துங்கள். உங்கள் மகன்/மகள் எதிர்மறையான பதிலளிப்புகளை பெறும்போதெல்லாம் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்குமாறு அவர்களை ஊக்குவிக்கவும்.
- **உங்களால் முடிந்தவரை** உங்கள் மகன்/மகளுக்கு ஆதரவளிக்கவும்.

**தொடர்பு:** கற்றல் மற்றும் சமூகமயமாக்கலுக்கான மையம்,
ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம் FHNW
www.fhnw.ch/ph/wisel, wisel.projekt.ph@fhnw.ch